DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SENDAMANGALAM

C.C.No.328/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | செல்வம் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

Sworn by Bench Clerk J. Sham

**(எதிரி ஆஜர் இல்லை BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை Date : 13.08.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், வெண்ணந்துார் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரை நாமக்கல் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 10.04.2025ம் தேதி நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் அவர்களின் வாய்மொழி உத்தரவுபடி நானும் தலைமை காவலர் திரு.பிரபாகரன் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். அன்றைய தினம் 16.00 மணியளவில் எருமப்பட்டி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பாலப்பட்டி கிழக்கு தெரு, பெரியசாமியின் இடிந்தநிலையில் உள்ள வீட்டின் முன்பு கண்காணித்தபோது அங்கு சுமார் 55 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும்

வகையில் கையில் பிராந்திபாட்டில் உடன் நின்று கொண்டிருந்தார். அவர்தான் இவ்வழக்கின் எதிரி. அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.

எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் பெரியசாமி த.பெ.தொப்பளான் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு மதுபானத்தை விற்பனைக்கு வைத்துள்ளதாக கூறினார். எதிரி தன் வைத்திருந்த அரிசி சாக்கு பையை ஆய்வு செய்தபோது அதில் தலா 180 ML அளவுள்ள Express Brandy மதுபானம் 27 பாட்டில்கள் இருந்தது. எதிரி அவற்றை விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார்.

எதிரியை அவர் அரிசி சாக்குப்பையில் வைத்திருந்த மதுபான பாட்டில்களுடன் நான் எனது செல்போனில் புகைப்படம் எடுத்தேன். **(புகைப்படம் அ.சா.ஆ.1 ஆகவும், பிரிவு 63(4) (C) BSA சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

அதனால் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த மதுபானம் இருந்த பாட்டில்களுடன் நிலையம் வந்து தனியறிக்கையுடன் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த மதுபானத்தை தலைமை காவலர் திரு.சீனிவாசன் என்பவரிடம் ஒப்படைத்தேன். **(தனி அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தலைமை காவலர் திரு.சீனிவாசன் சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.115/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் அவர்களின் பார்வைக்கு வைத்தார்.

வழக்கை ஆய்வாளர் தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 17.30 மணிக்கு எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தார். பின்னர் ஆய்வாளர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மாலை 17.45 மணிக்கு தலைமை காவலர் திரு.பிரபாகரன் மற்றும் எனது முன்னிலையில் பதிவு செய்தார்.

எதிரி பெரியசாமி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அரசு மதுபானத்தை விலைக்கு வாங்கி அதை அதிக விலைக்கு அங்கு வரும் நபர்களுக்கு விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த தலா 180 ML அளவுள்ள Express Brandy மதுபானம் 27 பாட்டில்கள் ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் ஆய்வாளர் உடன் 11.04.2025ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும் தலைமை காவலர் திரு.பிரபாகரன் சம்பவ இடம் சென்றோம். ஆய்வாளர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

ரோந்துக்கு நாங்கள் எந்த வாகனத்தில் சென்றோம் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் ரோந்துபணியில் இருந்ததற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி பெரியசாமி மாற்றுதிறனாளி என்றால் சரிதான். பெரியசாமிக்கு மதுபாட்டில்களை யார் வாங்கி கொடுத்தார் என்று நாங்கள் விசாரித்தோமா என்றால் விசாரித்தோம் ஆனால் பெரியசாமி சொல்லவில்லை.

எதிரி பொட்டிரெட்டிப்பட்டி அரசு மதுபான கடையில் மது வாங்கியதாக

சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் சரிதான். பாலப்பட்டியானது சுமார் 500 குடும்பங்கள் வசிக்கும் கிராமம் என்றால் சரிதான். இவ்வழக்கில் பொதுமக்கள் சாட்சிகள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

எதிரியிடம் காவல்நிலையத்தில் வைத்துதான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றோம் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. ஆனால் அது குறித்து சங்கதிகளை ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களில் இருந்து மாதிரிகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீதுபொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**